சுற்றுநிருபம் : 01/2019(HR)

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**248-1/1, காலி வீதி,**
**கொழும்ப -04**

மாவட்ட செயலாளர் / பிரதேச செயலாளர்

அபிவிருத்தி உதவியாளர் (இந்து கலாசாரம் / கலாசாரம்)

**35வது கலாபூஷண அரச விருது விழா – 2019**
**(தமிழ்க் கலைஞர்களைத் தெரிவு செய்தல்)**

01. கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்கின்ற அரச கலாபூஷண விருது விழாவிற்காக தமிழ்க் கலைஞர்களைத் தெரிவு செய்தல் சம்பந்தமாக,

02. வருடாந்தம் விருது வழங்கல் நிகழ்வாக ஏற்பாடு செய்து சிரேஷ்ட கலைஞர்களுக்கு அரச அங்கீகாரம் வழங்கப்படுவதும், அந்த கலைஞர்களுக்கு அரச விருது மூலம் கௌரவமளிப்பதுமே இந்த கலாபூஷணம் அரச விருது விழா மூலம் நடைபெறுகிறது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனத்தவர்கள் பங்கு பற்றும் இவ் விருது வழங்கல் விழா தேசிய அரச விழாவாக அமைந்துள்ளது.

03. எதிர்வரும் 2019 டிசம்பர் மாதம் 15ஆம் திகதியன்று நடைபெறவுள்ள மேற்படி கலாபூஷண அரச விருது விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்க் கலைஞர்களைத் தெரிவு செய்தல் தொடர்பாக கீழ்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

04. (i) தனிப்பட்ட முறையில் கலாபூஷண விருது விண்ணப்பங்கள் கோரல் நடைபெறமாட்டாது.
   (ii) கடந்த வருடங்களில் கலைஞர்களினால் சமர்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2019ஆம் ஆண்டுக்கோ அல்லது எதிர்வரும் வருடங்களுக்கோ செல்லுபடியாகாது.
   (iii) பிரதேசத்தில் தற்போது நிரந்தர வதிவிடமாக இருப்பவரும், 2019 டிசம்பர் 15ஆம் திகதியன்று 60 வயதைப் பூர்த்தி செய்த கலைஞர்களின் விண்ணப்பங்களை மேற்படி விருதுக்கு சிபாரிசு செய்தல் வேண்டும்.
   (iv) 2019 கலாபூஷண அரச விருது விழா சம்பந்தமாக ஒரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து மூன்று பேரின் பெயர்களை வழங்குதல் வேண்டும். அதன்படி துறையில் சிரேஷ்டத்துவ அடிப்படையில் சமர்ப்பித்தல் வேண்டும். இது சம்பந்தமாக அந்த

பிரதேச கலாசார அதிகார சபையின் சிபார்சுடன், கலாசார உத்தியோகத்தர் / கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் / அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சிபார்சுடன், பிரதேச செயலாளரின் அனுமதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. விருது பெறுவோரை தெரிவு செய்வதற்குத் தேவையான தகவல்களைப் பெறுவதற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள “இணைப்பு – 02” என்ற படிவத்தைப் பயன்படுத்தவும். மேலும் கலைஞரின் கலை வாழ்க்கை தொடர்பான தகவல் படிவத்தினைத் தயாரித்து, கலைஞரின் பாஸ்போர்ட் அளவிலான புகைப்படங்கள் 03ஐயும் (3½ cm X 4½ cm) இணைத்து திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

(i) நாடகக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவிய மற்றும் சிற்பக் கலைஞர்கள், இசைக்கலைஞர்கள், நடனக் கலைஞர்கள், கிராமியக் கலைக்கலைஞர்கள், தற்காப்புக்கலைக் கலைஞர்கள், திரைப்படக் கலைஞர்கள் மற்றும் வேறு பொருத்தமான துறை சார்ந்தவர்கள் இந்த அரச விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

(ii) மேற்குறிப்பிட்ட துறைக்கு அமைவாக பரம்பரையாகவோ அல்லது தொழில் துறையாகவோ குறிப்பிட்ட துறைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை விசேடமாக கவனிக்கப்படல் வேண்டும். சான்றிதழ்கள் சமர்ப்பிக்க முடியாது இருப்பின் கடந்த 10 வருட காலத்திற்குள் அல்லது அதற்கு முன்னைய காலப்பகுதிக்குள் விசேட சேவையாற்றிய கலைஞர்களைத் தேடி சமர்ப்பிக்கும் அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளும் தன்மைக்கு அமைய தெரிவுகள் நடைபெறும்.

06. இந்த வருடத்தில் அல்லது எதிர்வரும் வருடங்களில் இவ்வாறான முறையில் விருது வழங்குவதற்கு விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படவேண்டியதுடன், அவ்வாறு தெரிவு செய்யப்படும் கலைஞர்களின் உரிய தரவுகள் உள்ளடங்கிய ஆவணங்களை இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி **2019ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15ஆம்** திகதிக்கு முன்னர் **இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளருக்கு** அனுப்பி வைத்தல் வேண்டும்.

07. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை விருதுக்கு சிபாரிசு செய்யும் உத்தியோகத்தர் குறிப்பிட்ட கலைஞரை நேரில் சந்தித்து அவரின் தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். தெரிவு செய்யப்படும் கலைஞர் தெரிவின் பின் காலமானால் குறிப்பிட்ட கலைஞருக்குப் பதிலாக வேறு கலைஞரைத் தெரிவு செய்யும் பொறுப்பு பிரதேச செயலாளருக்கு உரித்தானதாகும். அவ்வாறான நிலைமை ஏற்படின் தவறாது பணிப்பாளருக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

அ.உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்

**இணைப்பு – 02**

| புகைப்படம் |
| --- |
| 3 பிரதிகள் |
| (3½ cm X 4½ cm) |

**அரச கலாபூஷன விருது விழா - 2019**
**கலாசார அலுவல்கள் திணைக்களம்.**

**"கலாபூஷண" விருதின் பொருட்டு கலைஞரின் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.**

1. வதியும் மாவட்டம்:
2. பிரதேச செயலாகப் பிரிவு:-
3. 2019.12.15 இல் வயது :- வருடம்: ......................... மாதம் .............................
4. பிரதான கலை மொழி:-
5. கலைஞரின் முதலெழுத்துடன் பெயர்:- ........................................................................
6. முதலெழுத்துக்களை குறிக்கும் பெயர்:- ......................................................................
7. கலை வாழ்வில் பயன்படுத்தும் பிற பெயர்கள்:-................................................................
8. வங்கிக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்:-...........................................................
9. நிரந்தர வதிவிட முகவரி:-...............................................................................................

   ........................................................................................................................................
10. I. கலைஞரின் தொலைபேசி இலக்கம்:- ...........................................................................
11. II.நெருங்கிய உறவினர் ஒருவரின் தொலைபேசி இலக்கம்:- ................................................
12. கல்வி கற்ற பாடசாலையும் பிற கல்வித் தகவல்களும்:- ....................................................

    ........................................................................................................................................

    ........................................................................................................................................
13. பிறந்த ஊர்ப் பிரதேசம்:- ..............................................................................................
14. பிறந்த திகதி:- ...................................................................................................................
15. பாரம்பரிய கலைஞர் ஒருவராயின் பரம்பரை தொடர்பில் சுருக்கமான விபரம்:-

    ........................................................................................................................................

    ........................................................................................................................................
16. பெற்றுள்ள அரச விருதுகள் தொடர்பான தகவல்கள்:- .........................................................

........................................................................................................................................

17. அரச சார்பற்ற விருதுகள் தொடர்பான தகவல்கள்:- ..........................................................

...................................................................................................................................................

18. அழகியல் பாடங்கள் தொடர்பான புத்தங்கள், கட்டுரைப் பதிவுகளை அச்சிட்டிருப்பின் அவை பற்றிய விபரங்கள்:- ..........................................................................................

...................................................................................................................................................

19. மேடையேற்றங்கள்/ கச்சேரிகள் போன்றவைகளை ஒழுற்கு செய்திருப்பின் அவற்றின் விபரம்:- ......................................................................................................................

...................................................................................................................................................

20. மேடை நாடகம்/ தொலைக்காட்சி நாடகம்/ திரைப்படங்கள் போன்ற தயாரிப்பக்களை மேற்கொண்டிருந்தால் அந்த ஆக்கங்களின் பெயர்கள்:- ..........................................................

...................................................................................................................................................

21. ஏனையவர்களின் ஆக்கங்களுக்கு பங்களிப்புச் செய்திருப்பின் அவை தொடர்பான விபரங்கள்:- .............................................................................................................

...................................................................................................................................................

22. தனியார் கலா நிலையங்களுடனான தொடர்புகள்:- ..........................................................

...................................................................................................................................................

23. கலைத்துறையில் பிள்ளைகளுக்குள்ள தொடர்புகள்:- ..........................................................

...................................................................................................................................................

24. கலைஞரின் பொதுவான ஆரோக்கிய நிலை:- ..........................................................................

...................................................................................................................................................

25. கலைஞருக்கு அரசாங்கத்தினால் கிடைக்கின்ற உதவிகள்:- ..................................................

...................................................................................................................................................

26. கலைஞரின் கலை வாழ்கை பற்றிய தகவல்களை தனித்தாளில் அமைத்து "இணைப்பு 3" எனக் குறிப்பிட்டு இத்துடன் இணைத்து அனுப்பவும்.

**27. பிரதேச கலாசார அதிகாரக்குழுவின் சிபாரிசு:-**

விண்ணப்பத்தினை பரீட்சித்தேன். அரச கலாபூஷண விருதினை வழங்கும் பொருட்டு தேவையான தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதனை சிபாரிசு செய்கின்றேன்.

......................................................

தலைவர்/ செயலாளர்

**28. கலாசார உத்தியோகத்தர்/ கலாசார அபிவிருத்தி உதவியாளர்/ அபிவிருத்தி உத்தியோகத்தரின் அறிக்கை:-**

2019ஆம் ஆண்டின் பொருட்டு கலாபூஷண விருதினை வழங்குவதற்காக திரு/ திருமதி/ செல்வி: ............................................................... தகுதியுள்ள ஒரு கலைஞர் என்பதனை சிபாரிசு செய்கின்றேன். அக்கலைஞர் இப்பிரதேச செயலகப்பிரிவில் வசிப்பவர் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன். இக்கலைஞர் இதற்கு முன்னர் கலாபூஷண விருதினை பெறவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ........................ ...........................................................................

கலாசார உத்தியோகத்தர்/ கலாசார அபிவிருத்தி உதவியாளர்/
அபிவிருத்தி உத்தியோகத்தர்

தொ.பேசி இல.: .................................... பெயர்: .......................................................

பதவி இலச்சினை.

**29. பிரதேச செயலாளரின் சிபாரிசு:-**

2019ஆம் ஆண்டின் பொருட்டு கலாபூஷண விருதினை வழங்குவதற்காக இப்பிரதேச செயலகப் பிரிவில் வதியும் திரு/ திருமதி/ செல்வி:............................................................ ஐ தெரிவு செய்வதற்கு தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள ஒருவர் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:-................................................ ..........................................................

பிரதேச செயலாளர்
பதவி இலச்சினை.

**30. மாவட்டச் செயலாளரின் சிபாரிசு:-**

எனது மாவட்ட அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள ................................................... என்ற பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் வதியும் ..................................................... என்பவர் கலாபூஷண விருது பெறுபவர் எனப் பெயரிட மாவட்ட தெரிவுக்குழுவால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதனை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:-................................................ ....................................................................

மாவட்டச் செயலாளர்,
பதவி இலச்சினை.

**31. பணிப்பாளரின் அங்கீகாரம்.**

இங்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கலைஞரின் கலாபூஷண விருதினை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அங்கீகரிக்கின்றேன்.

திகதி:-.......................... ....................................................................

பணிப்பாளர்

கலாசார அலுவல்கள் திணைக்களம்.

குறிப்பு:- இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை பூர்த்தி செய்யும் பொது கலாசார உத்தியோகத்தர்/ கலாசார அபிவிருத்தி உதவியாளர்/ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரில் ஒருவர் விருது பெறுவோரிடம் சென்று தங்களால் அதனை பூர்த்தி செய்வதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும். மேலும் இத்தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவர்களிடமுள்ள விருதுகள் பெற்றுள்ள சான்றிதழ்களின் பிரதிகளைப் பெற்றுக் கொண்டு இத்தகவல்களை பட்டியலில் இணைத்து அனுப்புதல் வேண்டும்.